**செய்தி வெளியீடு எண்: 98** **நாள்: 13,02,2013**

**அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை 600 003**

1850 இல் சென்னையில் தொழிற்கலைப்பள்ளி ஒன்று அலெக்ஸாண்டர் உறண்டரினால் தொடங்கப்பட்டு, 160 வருட பாரம்பரியமிக்க சென்னை அரசு கவின் கலைக்கல்லூரியாக இயங்கி வருகின்றது. இக்கல்லூரியில் இளங்கவின்கலை நான்காண்டு பட்டப்படிப்பில் வண்ணக்கலைத்துறை, காட்சி வழித் தொடர்பு வடிவமைப்புத் துறை, சுடுமண் துறை, சிற்பக்கலைத் துறை, துகிலியல் துறை, பதிப்போவியத் துறை என ஆறு துறைகளில் மாணவர்கள் பயின்றுவருகின்றனர். முதுகவின்கலை இரண்டாண்டு பட்டப்படிப்பில் வண்ணக்கலைத்துறை, காட்சி வழித் தொடர்பு வடிவமைப்புத் துறை, சுடுமண் துறை, சிற்பக்கலைத் துறை, துகிலியல் துறை என ஐந்து துறைகளில் மாணவர்கள் பயின்றுவருகின்றனர்.

2012–2013 ஆம் கல்வியாண்டில் 489 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரி வளாகத்தில் இளங்கவின்கலை, முதுகவின்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்துத் துறை மாணவ, மாணவியர்களின் கலைப்படைப்புகளை வெளிக் கொணரும் வகையில் கலை ஆர்வலர்கள், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கண்டுகளிக்கும் வகையில் 2012–2013 ஆம் ஆண்டுக்கான கவின்கலைக்கண்காட்சி தொடங்கப்பெறுகிறது. மேலும் அக்கவின்கலைக்கண்காட்சியின் துவக்க விழாவில் அனைத்துத் துறை மாணவர்களின் சிறந்த கலைப்படைப்புகளுக்கு ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு மாணவருக்கு ரூ 600/– வீதம் மொத்தம் 70 மாணவர்களுக்கு ரொக்கப் பணமாகவும், சான்றிதழும் வழங்கப்பட உள்ளது. 2010, 2011 ஆம் ஆண்டில் இளங்கவின்கலை, முதுகவின்கலை பட்டப்படிப்பு பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு 15.02.2013 அன்று இக்கல்லூரி வளாகத்தில் பட்டமளிப்பு விழா காலை 11.00 மணிக்கு நடைபெறுவதாலும், அவ்விழாவிற்கு மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு, இளைஞர் நலன், நீதிமன்றங்கள், சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்கள் பட்ட இதழ்களை வழங்கி பட்டமளிப்பு பேருரையாற்றவும், திரு.ரமேஷ்ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் விழா தலைமை உரையாற்றவும், திரு சோ.சு. ஜவகர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர்/ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, முன்னிலை வகிக்கவும் உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**